DEPOSITION OF WITNESS
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

MCOP No.19/2022

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி

Name சகாதேவன்

Father's Name த/பெ.காளையாண்டி

Village

Taluk

Age 60

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2025

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். மனு சம்பந்தமாக எனது முதல் விசாரணை சாட்சியத்திற்காக நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை படித்து காண்பித்து சரியென ஒப்புக்கொண்டு அதில் கையொப்பங்கள் செய்துள்ளேன். எனது வழக்கிற்கு ஆதரவாக பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். விபத்து சம்பந்தமான குளத்தூர் காவல் நிலைய குற்ற எண்.31/2017 முதல் தகவல் அறிக்கையின் நகல் தாக்கல் செய்துள்ளேன். அது **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி நகல் தாக்கல் செய்துள்ளேன். அது **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா.ஆ.3.** 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சான்று நகல் **ம.சா.ஆ.4.** எனது சேமிப்பு வங்கி கணக்கு முதல் பக்கம் மற்றும் ஆதார்

அட்டை நகல்கள் முறையே **ம.சா.ஆ.5, 6** (அசலுடன் ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்பட்டது.) தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் எனக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் **ம.சா.ஆ.7.** தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவ குழுமத்தால் 5 % ஊனம் என வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் **நீ.ம.சா.ஆ.1.** மனுப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

(**குறுக்கு விசாரணை வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.)**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்
தூத்துக்குடி.